மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல் .

முன்னிலை. திரு.அ. மருதுபாண்டி, B.Com.,B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இரணியல்

(கூடுதல் முழு பொறுப்பு)

2024 -ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

**இடைக்கால மனு எண். 01/2023**

**in**

**அசல் வழக்கு எண் .32/2022.**

1. நாராயணன் போற்றி
2, கேசவன்போற்றி
3. வேணுகோபாலன் போற்றி ..........மனுதாரர் கள் / 1- முதல் 3 பிரதிவாதிகள்

/எதிர் /

1. ராதாகிருஷ்ணன்,
2. முகம்மது காசிம்
3. முகம்மது மாஹின் ...எதிர்மனுதாரர்கள் / வாதி / 4 ம் மற்றும் 5 ம் பிரதிவாதிகள்.

இம்மனு என் முன் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர்கள் / 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. T. செண்பகவள்ளி அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.. ஸ்ரீநிவாசன் அவர்கள்

ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தேவ பிரசன்னா அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வியாகுல முத்து அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்த நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151-இன் கீழ் 07.11.2022 அன்று இவ்வழக்கில் . மனுதாரர்கள்/1- முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தரப்பு உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி மனுதாரர்கள்/1- முதல் 3 பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர் இம்மனுவை தனக்காகவும், தனது சகோதரர்களான 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கை வாதி, பிரதிவாதிகளாகிய தங்களுக்கு எதிராக உறுத்துக்கட்டளை வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு 07.11.2022 அன்று தங்களது வக்காலத்து மற்றும் எதிருரை தாக்கல் செய்வதற்காக இருந்ததும், தாங்கள் வெளி மாநிலத்தில் வசித்து வருவதாலும், தங்களது இளைய

சகோதரருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தினாலும் தங்களால் தங்களது வழக்கறிஞரை சந்தித்து வக்காலத்து மற்றும் எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே, இந்நீதிமன்றம் தங்ளை ஒரு தரப்பாக்கி ஒருதலைப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வக்காலத்து தாக்கல் செய்ய முடியாமல் போனது மனப்பூர்வமாகவோ, வேண்டுமென்றோ செய்த செயல் இல்லை. ஆகவே, தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தரப்பு உத்தரவை ரத்து செய்து மேற்படி வழக்கை 1 முதல் 3 பிரதிவாதிகளாகிய தாங்கள்தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்கவில்லையெனில் மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் மற்றும் துயரங்கள் ஏற்படும்.. எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

**4.** மனுதாரர்கள் கோரும் பரிகாரம் மேற்படி-யார்களுக்கு கிடைக்கத்தக்கதா? அல்லது இல்லையா?

**5.** இரு தரப்பிலும் வாதிட முன் வரவில்லை. வழக்கு கோப்பு மிக கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

(i) மனுதாரர் தன்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் , அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் வக்காலத்து மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 07.11.2022 அன்று வழக்கு ஒத்தி போடப்பட்ட நிலையில் மனுதாரரும் மற்றும் 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகளும் வெளி மாநிலத்தில் வசித்து வருவதாலும், மேலும் மனுதாரருடைய இளைய சகோதரன் உடல்நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தினாலும், மேற்படியார்களால் அவர்களது வழக்கறிஞர்களை சந்தித்து வக்காலத்து மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், ஆகையால் மேற்படியார்களுக்கு எதிராக மேற்படி தேதியில் ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், எனவே, மேற்படி உத்தரவை ரத்துச் செய்ய கோரும் வகைக்காக இம்மனு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்.

(ii) மேற்படி சூழ்நிலையில், வழக்கு கோப்பை மிக கவனமாக பரிசீலனை செய்கையில், கடந்த 19.09.2022 க்கு முன்பு மனுதாரர் மற்றும் பிரதிவாதிகள் 2 மற்றும் 3 நபர்கள் மீது அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு , மேற்படி தேதி அன்று மேற்படியார்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.செண்பகவள்ளி அவர்கள் ஆஜராகி மேற்படியார்கள் சார்பாக வக்காலத்து தாக்கல் செய்ய ஏற்றுக் கொண்டதால் அசல் வழக்கானது

சார்பாகி அதன் பிறகு 07.11.2022 அன்று மேற்படியார்கள் தரப்பில் வக்காலத்து மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய ஒத்தி போடப்பட்டிருந்த நிலையில் மேற்படியார்களோ அல்லது அவர்களது வழக்கறிஞரோ ஆஜராகவில்லை. மேலும், மனுதாரர் கூறுவது போன்று மேற்படியார்கள் வெளி மாநிலத்தில் வசித்து வந்தாலும், அவர்களது வழக்கறிஞர் கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் வசித்து வருகிறார். ஆகையால், அவர் ஆஜராகி வக்காலத்து மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய எவ்வித தடையும் இல்லை. மேலும், இந்நீதிமன்றமும் மேற்படியாருக்கு எதிராக எவ்வித தடையும் விதிக்கவில்லை. எனவே, மேற்படியார்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைப்பட்ச உத்தரவை ரத்துச் செய்ய கோரும் காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. இருந்த போதிலும், நீதியின் நலன் கருதி, மேற்டியார்களுக்கு அசல் வழக்கில் எதிர்வாதம் புரிய ஒரு வாய்ப்பு வழங்கும் பொருட்டு செலவுத் தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. <u>இறுதி முடிவு</u> :-

முடிவாக, ரூபாய் 500/- ஐ மாவட்ட இலவச சட்ட உதவி மையத்தில் செலுத்தி அதற்கான ரசீதை இந்நீதிமன்றத்தில் வருகிற 19.07.2024- ந்

தேதியன்று தாக்கல் செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில், மனு தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணி மூலம் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்.)அ.மருதுபாண்டி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்
( கூடுதல் முழு பொறுப்பு)

உண்மை நகல்

மா.உ.நீதிமன்றம், இரணியல்,
இடைக்கால மனு எண். 01/2023
in
அசல் வழக்கு எண் 32 /2022
உத்தரவு, நாள் 28.06.2024